வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 161/2022

வழக்கு சாட்சி LW1 / PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமிகண்னு | ஜாதி | |
| கணவர்/தந்தை | சீதாராமன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 65 |

தேதி 16.09.2025

எதிரி ஆஜர் இல்லை

எதிர் தரப்பில் மனு தாக்கல் 355BNSS பிரிவில் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் மாத்தூரில் வசித்து வருகிறேன். பெரிய மாத்தூர் காமராஜ் சாலையில் உள்ள சீனிவாச பெருமாள் கோவிலில் நான் பட்டாசாரியராக இருக்கிறேன். 18.11.2022 இரவு கோவில் கதவை சாத்திவிட்டு 19.11.2022 காலை திறந்த போது உள் கதவு உடைக்கப்பட்டு அம்மன் கழுத்தில் இருந்த தாலி திருடப்பட்டிருந்தது. கோவில் உண்டியல் உடைக்கப்பட்டிருந்தது உடனடியாக ஊர் தலைவரிடன் கூறினேன். பின்னர் பால் பண்ணை காவல் நிலையத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரினை அளித்தேன். மேற்படி புகாரனது அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் காவல் நிலையத்தில் 1 வாரம் கழித்து என்னை அழைத்து திருடிய நாபரினை ஒருவரை காட்டினார்கள். அவரை எனக்கு தெரியாது. திருடிய நகை, பணம் எதுவும் நான்

இதுவரை பெறவில்லை. என்னிடம் காட்டப்படும் நகைதான் திருடப்பட்ட நகை என்றால் ஆமாம். போலிசார் விசாரணை செய்தார்கள்.

## குறுக்கு விசாரணை

தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். புகாரை எழுதியது யார் என்றால் ஊர் காரர்கள். நான் கையொப்பம் மட்டும் தான் செய்தேன். சம்பத்தன்று புகார் அளித்தேனா என்றால் இல்லை மறுநாள். வேறு தேதியில் நான் புகார் கொடுத்ததாகக் கூறியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். போலிசார் கோவிலுக்கு எப்போது வந்தார்கள் என்றால் மறுநால் 19ம் தேதி. எத்தனை மணிக்கு என்றால் மாலை நேரத்தில். கைரேகை உடைந்த பூட்டினை கைப்பற்றினார்களா என்றால் கைரேகை எடுத்தார்கள். என்னை போலிசா் எங்கு வைத்து விசாரணை செய்தா்கள் என்றால் காவல் நிலைத்தில் 19-ம் தேதிக்கு பிறகு என்னை விசாரணை செய்யவில்லை என்றால் ஆமாம். எனக்கு தாலியில் உடன் சேர்க்கும் பொட்டு, குண்டு தெரியும் என்றால் தெரியும். நான் புகாரில் தாலி குண்டு காணவில்லை என கூறியுள்ளேன் என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டியது என்னவென்றால் பொட்டு, தாலி. எவ்வளவு உண்டியல் பணம் காணவில்லை என குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. நான் சொன்னவாறு சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சம்பவம் ஏதும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நகை உண்மையாக திருடு போயிருந்தால் நகையை நீதிமன்றத்திலிருந்து திரும்ப பெற்றிருப்போம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**